[2018] 9 SCR 338

இந்திய உச்சநீதிமன்றம்

2018 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 31 ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. அபைய் மனோகர் சப்ரே

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. உதய் உமேஷ் லலித்

குற்றவியல் மேல்முறையீடு எண் 949/2018

சுரிந்தர் குமார் கண்ணா

எதிர்

வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள்

மயக்க மருந்து பொருட்கள் மற்றும் மனநிலைக்கு ஊறு செய்யும் பொருட்கள் சட்டம் 1985 – பிரிவு 21 உ /இ பிரிவு 29 – உடன் குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேல்முறையீட்டாளருக்கு தண்டணை - உரிமையாக – தீர்முடிவு: உடன் குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் வாக்குமூலத்தை மற்றொரு உடன் குற்றஞ்சாட்டபட்ட நபருக்கு எதிரான அடிப்படை சான்றாக எடுத்துக்கொள்ளக்கூடாது, நீதிமன்றத்திற்கு உத்திரவாதம் அளிக்கும் வகையில் பயன்படுத்திக் கொள்ளலாம் - இந்த வழக்கில் உடன் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வாக்குமூலத்தை தவிர மேல்முறையீட்டாளர் கேள்விக்குரிய குற்றத்தில் ஈடுபட்டதாக காட்டக்கூடிய எந்த ஆதாரமும் இல்லை - அடிப்படை சான்று இல்லாத நிலையில் உடன் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வாக்குமூலத்தின் அடிப்படையில்

மட்டும் மேல்முறையீட்டாளருக்கு தண்டனை விதிப்பது முறையானது அல்ல - மேல்முறையீட்டாளருக்கு எதிரான தண்டனை மற்றும் சிறை தண்டனை உத்தரவானது ரத்து செய்யப்படுகிறது - மேல்முறையீட்டாளர் விடுதலை செய்யப்படுகிறார் - சாட்சிய சட்டம், 1872 பிரிவு 24,25 மற்றும் 27 பயங்கரவாத மற்றும் சீர்குலைக்கும் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1987 பிரிவு 15.

இந்த மேல்முறையீட்டை அனுமதித்த இந்நீதிமன்றத்தின் தீர்முடிவுகள் பின்வருமாறு:

1.1 ஒரு உடன் குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் ஒப்புதல் வாக்குமூலத்தை சில சூழல்களில் மற்ற குற்றஞ்சாட்டவருக்கு எதிரான அனுமதிக்கும் பயங்கரவாத மற்றும் சீர்குலைக்கும் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் பிரிவு 15 மாதிரியான அல்லது அதனை போன்ற ஒப்புதல் வாக்குமூலத்தை உடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான ஒப்புதலாக அனுமதிக்கக்கூடிய எந்தவொரு சரத்தும் மயக்க மருந்து பொருட்கள் மற்றும் மனநிலைக்கு ஊறு செய்யும் பொருட்கள் சட்டத்தில் இல்லை [பத்தி 10] [344 – D – E].

1.2 இந்த வழக்கில் உடன் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வாக்குமூலத்தை தவிர மேல்முறையீட்டாளர் கேள்விக்குரிய குற்றத்தில் ஈடுபட்டார் என்பதனை எடுத்துரைக்கக்கூடிய எந்தவொரு சாட்சியமும் இல்லை. உச்சநீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட சட்டத்தின் படி உடன் குற்றம் சாட்டப்பட்டவரின் இது போன்ற

ஒப்புதல் வாக்குமூலத்தை மற்றொரு உடன் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான அடிப்படை சாட்சியமாக ஏற்க இயலாது. அதனை நீதிமன்றத்திற்கு உத்தரவாதம் அளிப்பதற்து வேண்டுமானால் பயன்படுத்தலாம். அடிப்படை சாட்சியம் இல்லாத நிலையில் உடன் குற்றஞ்சாட்டப்பட்டவரின் ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் அடிப்படையாக கொண்டு மேல்முறையீட்டாளரை தண்டித்தது முறையானதல்ல. ஆகவே மேல்முறையீட்டாளருக்கு அவருக்கு எதிரான குற்றசாட்டுகளில் இருந்து விடுபட உரிமையுள்ளது என்று உத்தரவிட்டுள்ளது. [பத்தி 14] [347- F H: 348A]

ஹரி சரன் குர்மி மற்றும் ஜோகியா ஹாஜம் எதிர் பீகார் மாநிலம் [1964] 6 SCR 623 – பின்பற்றப்பட்டது.

காஷ்மிரா சிங் எதிர் மத்திய பிரதேச மாநிலம் [1952] SCR 562 சார்ந்தது.

கண்ஹய்யாலால் எதிர் இந்திய அரசு (2008) 4 SCC 668: [2008] 1 SCR 350: டோபன் சிங் எதிர் தமிழ்நாடு அரசு (2013) 16 SCC 31: [2013] 9 SCR 962:புபோனி சாகு எதிர் அரசு (1949) 76 இந்திய மேல்முறையீடு 147; அரசு எதிர் நளினி (1999) 5 SCC 253: [1999] 3 SCR 1 சார்வுறப்பட்டது.

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>

[2008] 1 SCR 350	பத்தி 7 ல்	குறிப்பிடப்பட்டுள்ளது
[2013] 9 SCR 962	பத்தி 8 ல்	குறிப்பிடப்பட்டுள்ளது
[1952] SCR 526	பத்தி 11 ல்	சார்ந்திருக்கப்பட்டுள்ளது

[1964] 6 SCR 623 பத்தி 12 ல் பின்பற்றப்பட்டுள்ளது

[1999] 3 SCR 1 பத்தி 13 ல் குறிப்பிடப்பட்டுள்ளது

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண் 949/2018.

21/12/2016 தேதியிட்ட குற்றவியல் மேல்முறையீட்டு எண்.D 798 DB/2014- என்ற வழக்கில் சண்டிகரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

ஜெயந்த் பூஷன், மூத்த வழக்கறிஞர் பக்லட் சிங் ஷர்மா, கிசலயா சுக்லா, கிருஷ்ண கண்ட் சுக்லா, ரீஜா வர்க்கீஸ், கேடன் பன்ட், துஷர் பூஷன். மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்கள்.

மணிந்தர் சிங், அரசின் கூடுதல் உதவி தலைமை வழக்கறிஞர், ஆர். பாலசுப்ரமணியன், ரோகித் பட், பிரபாஸ் பஜாஜ், சஞ்சை குமார் தியாகி, பி. கிருஷ்ண பிரசாத், எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்கள்.

தீர்ப்புரை

நீதிமன்றத்தின் தீர்ப்பானது மாண்புமிகு நீதியரசர் உதய் உமேஷ் லலித் அவர்களால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேல்முறையீட்டிற்கான சிறப்பு அனுமதி வழங்கப்பட்டது.

2) சண்டிகரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியான நீதிமன்றத்தால் மயக்க மருந்து பொருட்கள் மற்றும் மனநிலைக்கு ஊறு செய்யும் பொருட்கள் சட்டம் 1985 (சுருக்கமாக என்.டி.பி.எஸ். சட்டம்) பிரிவு 29 வுடன் பிரிவு 21 C-கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களில் மேல்முறையீட்டாளரின் தண்டனையை உறுதி செய்து 21/12/2016 தேதியில் குற்றவியல் மேல்முறையீட்டு எண் 798/2014 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவின் சரியான தன்மையினை இம்மேல் முறையீடு எதிர்க்கிறது.

3. அரசு தரப்பின் வாதங்களாவன:

எ. ஜம்மு பக்கத்திலிருந்து ஹோஷியார்பூர் வழியாக பதிவு எண் - PB 02AJ – 7288 கொண்ட வெள்ளை நிற இண்டிகா காரில் சண்டிகருக்கு போதை பொருள் கொண்டு செல்லப்போவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் வருவாய் புலனாய் இயக்குநரக அதிகாரிகள் (DRI சுருக்கமாக) ஹோஷியர்பூர் - கார்ஷ்ங்கர் சாலை சுங்க சாவடியில் மறித்தனர். 10.35 மணிக்கு ஹோஷியர்பூர் பக்கம் இருந்து வந்த பதிவு எண் PB-02AJ -7288 கொண்ட வெள்ளை நிற இண்டிகா காரினை அவர்கள் வழிமறித்தனர். அந்த காரினை ராஜ்குமார் என்ற

ராஜீ ஓட்டிவந்தார் சுரிந்தர் பால் சிங் என்பவர் அவருக்கு அருகில் அமர்ந்திருந்தார். காரையும் அதில் உள்ளவர்களையும் பாதுகாப்பான முறையில் சோதனை செய்வதை உறுதி செய்ய காரானது கண்காணிப்பாளர் அலுவலகம், மத்திய காவல் வரம்பு, மாடல் டவுன் ஹோஷியர்பூர் அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. வருவாய் புலனாய் இயக்குநரக அதிகாரிகள் மயக்க மருந்து பொருட்கள் மற்றும் மனநிலைக்கு ஊறு செய்யும் பொருட்கள் சட்டம் பிரிவு 50 கீழானஅறிவிப்பினை ராஜ்குமார் (எ) ராஜு மற்றும் சுரிந்தர் பால் சிங்கிற்கு சார்வு செய்தனர்.

பி. சந்தேகப்பட்ட நபர்களின் விருப்பத்திற்கேற்றவாறு அவர்களுடைய சோதனையும் காரின் சோதனையும் தனிப்பட்ட சாட்சி மற்றும் மூத்த புலனாய்வு அதிகாரி ஸ்ரீ எஸ்ஜேஎஸ். சுக் முன்னிலையில் நடத்தப்பட்டது. சந்தேகப்பட்ட நபர்களின் தனிப்பட்ட பரிசோதனையில் குற்றச்சாட்டில் உட்படுத்தக்கூடிய எந்த பொருளும் கிடைக்கவில்லை. எனினும் காரை சோதனையிட்ட போது காரின் டிக்கி கதவில் மஞ்சள் நிற டேப்பினால் கட்டப்பட்ட நான்கு பாக்கெட்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. அந்த நான்கு பாக்கேட்டுகளின் மொத்த எடை 4,300 கிலோவுக்கு வந்தது.

சி. அந்த ஒவ்வொரு பாக்கேட்டுகளும் கடுமையான வாசனை கொண்ட வெள்ளை நிற துகள்கள்/ பொடிகளை கொண்டிருந்தன. ஒவ்வொரு

பாக்கேட்டிலிருந்து சிறு துளி எடுத்து சோதனைக்குட்படுத்தப்பட்டதில் ஹெராயின் இருப்பது தெரியவந்தது. கைப்பற்றப்பட்ட 3,990 கிலோகிராம் எடைக் கொண்ட ஏராயின் மதிப்பு ரூ. 19,95,000 அந்த 4 பாக்கேட்டுகளிலும் கைப்பற்றப்பட்டன. அந்த 4 பாக்கெட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. விதிமுறைப்படி ஒவ்வொரு பாக்கேட்டுகளிலும் இருந்து 5 கிராம் கொண்ட மாதிரிகள் எடுக்கப்பட்டது. இண்டிகா காரும் வருவாய் புலனாய் இயக்குநரக அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டது. சந்தேகதிற்குரிய நபர்கள் இருவரின் வாக்குமூலங்கள் பதிவாக்கப்பட்டது. அவர்களுடைய வாக்குமூலங்களில் இருந்து அந்த 4 ஹெராயின் பாக்கேட்டுகள் ஜம்முவைச் சேர்ந்த Mr. கோல்டி r/o விஜய்பூர் அவர்களிடமிருந்து எடுத்து வரப்பட்டு சண்டிகரில் உள்ள PGI க்கு அருகே உள்ள ஆப்பிரிக்க வம்சாவாளியைச் சேர்ந்த நபருக்கு வழங்கப்பட உள்ளதாக தெரியவந்தது.

d. ஆரம்பத்தில் என்.டி.பி.எஸ். சட்டப் பிரிவுகள் 21, 22, 23, 28, 29 மற்றும் 60 கீழ் ராஜ்குமார்(எ) ராஜு மற்றும் சுரிந்தர் பால் சிங்க்கு எதிராக புகார் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணையின்போது போதை பொருள் கடத்திலில் இந்த மேல்முறையீட்டாளரின் ஈடுபடு இருப்பது தெரிய வந்தது. மேற்முறையீட்டாளர் கைது செய்யப்பட்ட பிறகு அவருக்கு எதிராக துணை புகார் முன்வைக்கப்பட்டு அது அசல் புகாருடன் கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வாதுரைகள் கேட்கப்பட்ட பிறகு என்.டி.பி.எஸ். சட்டப் பிரிவுகள் 21, 29 மற்றும் 60 கீழான

குற்றங்களுக்கு ராஜ்குமார் (எ) ராஜு, சுரிந்தர் பால் சிங் மற்றும் மேல்முறையீட்டாளருக்கு எதிராக குற்றச்சாட்டு வனையப்பட்டது.

4) அரசு தரப்பில் அவர்களுடைய வழக்கிற்கு ஆதரவாக 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். முன்வைக்கப்பட்டவைகளை ஏற்ற பிறகு விசாரணை நீதிமன்றம் மூன்று குற்றச்சாட்டப்பட்டவர்களுக்கு தண்டனை மற்றும் சிறைத் தண்டனையயும் விதித்தது. மேல்முறையீட்டாளர் என்.டி.பி.எஸ். சட்டம் பிரிவு 29 உடன் 21(c)-ன்கீழ் தண்டிக்கப்பட்டு அவருக்கு 12 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் 1 லட்சம் அபராதமும், அபராதம் செலுத்த தவறும்பட்சத்தில் 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அதே தண்டனை மற்றும் சிறை தண்டனையானது மற்ற இரண்டு குற்றஞ்சாட்டப்பட்டவர்களான ராஜ்குமார் (எ) ராஜு மற்றும் சுரிந்தர் பால் சிங் ஆகியவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. மூன்று தண்டனை குற்றவாளிகளும் மேல்முறையீடு செய்தார்கள். குற்றவியல் மேல்முறையீடு எண் D 955 DB 2013 என்ற வழக்கு ராஜ்குமார் (எ) ராஜ் மற்றும் சுரிந்தர் பால் சிங் அவர்களாளும் குற்றவியல் மேல்முறையீட்டு எண்.D-798 DB 2014 என்ற வழக்கு மேல்முறையீட்டாளராளும் தாக்கல் செய்யப்பட்டது. இரண்டு மேல்முறையீடுகளும் ஒன்றாக உயர்நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டது.

5) மேல்முறையீட்டாளரை பொறுத்தவரை, இவர் பெயர், உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களான ராஜ்குமார் (எ) ராஜ் மற்றும் சுரிந்தர் பால் சிங் அவர்களுடைய வாக்குமூலங்களில் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது என்பது

உயர்நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வாக்குமூலங்களை தவிர்த்து மேல்முறையீட்டாளரின் ஈடுபாட்டினை குறிப்பிடக்கூடிய எந்தவொரு ஆவணமும் முன்னிருத்தப்படவில்லை. இருப்பினும் மேல்முறையீட்டாளருக்கு எதிரான வழக்கு நிருபிக்கப்பட்டுள்ளதாக உயர்நீதிமன்றம் கண்டுள்ளது.

> "போதை பொருள் கடத்தலில் அவர் ஈடுபட்டுள்ளார் என்பதை காட்டி என்.டி.பி.எஸ். சட்டம் பிரிவு 29 கீழான தூண்டுதல் குற்றமானது குற்றஞ்சாட்டப்பட்ட சுரிந்தர் குமார் கண்ணாவிற்கு எதிராக நிரூபனமாகியுள்ளது. அவர் பெயரானது குற்றஞ்சாட்டப்பட்ட ராஜ்குமார் (எ) ராஜு மற்றும் சுரிந்தர் பால் சிங் அவர்களின் வாக்குமூலத்தில் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்ட ராஜ்குமார் (எ) ராஜு மற்றும் சுரிந்தர் பால் சிங் ஆகியோரின் வாக்குமூலங்கள் என்.டி.பி.எஸ். சட்டப் பிரிவு 67-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளதால் அவை சாட்சியமாக ஏற்றத்தக்கது. இண்டிகா காரில் பயணம் செய்த ராஜ்குமார் (எ) ராஜு மற்றும் சுரிந்தர் பால் சிங்கினை சிறை பிடித்து, பறிமுதல் செய்த டி.ஆர்.ஐ அதிகாரிகள் காவல் அதிகாரிகள் என்ற வரையறைக்குள் வரமாட்டார்கள் என்பதால் அந்த வாக்குமூலங்கள் சாட்சிய சட்டம் பிரிவு 25-ஆல் பாதிக்கப்படவில்லை".

என்று உயர்நீதிமன்றம் கருத்துரைத்தது.

அந்தவகையில் உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டாளருக்கு எதிராக சிறைத் உத்தரவிடப்பட்ட தண்டணை தீர்ப்பினை உறுதி செய்தது. ஆனால் சிறை

தண்டனையை 10 ஆண்டுகள் கடுங்கால் தண்டனை, 1லட்சம் அபராதம் அதனை செலுத்த தவறும்பட்சத்தில் 1½ ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை என்று குறைத்தது. அதே மாதிரியான சிறை தண்டனை மற்ற உடன் குற்றஞ்சாட்டப்பட்ட ராஜ்குமார் (எ) ராஜு மற்றும் சுரிந்தர் பால் சிங் பொறுத்து பிறப்பிக்கப்பட்டது.

6. இந்த மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளருக்கு எதிராக வழங்கப்பட்ட தண்டனை மற்றும் சிறைத்தண்டனையின் சரியான தன்மையினை எதிர்த்து கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் திரு. ஜெயந்த் பூவுன் அவர்களால், உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களான ராஜ்குமார் (எ) ராஜு மற்றும் சுரிந்தர் பால் சிங்கின் வாக்குமூலங்களை தவிர மேல்முறையீட்டாளருக்கு எதிராக எதுவும் இல்லை, அவர் சம்பவ இடத்தில் கைது செய்யப்படவும் இல்லை, கடத்தப்பட்ட பொருட்கள் எந்த வகையிலும் அவருடன் தொடர்புடையதுமல்ல என்று ஏடுத்துரைக்கப்பட்டது. இருந்தபோதிலும் எதிர்மேல்முறையீட்டாளருக்காக ஆஜரான கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர் திரு. மணிந்தர் சிங் மேல்முறையீட்டாளருக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் சிறை தண்டனையை ஆதாரித்தார். அவர் உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்ட நேரத்தில் துபாயில் உள்ள சௌத்ரி என்ற நபருடன் மேல்முறையீட்டாளர் தொடர்பில் இருந்ததை காட்டும் விதமாக அழைப்பு தரவுகளை (Call date) சமர்ப்பித்தார். இருந்தபோதிலும் கூடுதல் அரசு வழக்கறிஞர்,உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வாக்குமூலத்தை தவிர மேல்முறையீட்டாளரை தண்டனை குற்றவாளிகளுடன் இணைக்க எதுவும் இல்லை

என்பதை நேர்மையாக ஒப்புக்கொண்டார். அழைப்பு தரவுகளும் உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்ட நேரத்தில் மேல்முறையீட்டாளர் அவர்கள் இருவரில் ஒருவருடன் தொடர்பில் இருந்தார் என்பதனை காட்டவில்லை.

7. தற்போதைய செயலுக்காக, என்.டி.பி.எஸ். சட்டம் பிரிவு 67-ன் படி உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது என்பதன் அடிப்படையில் நாங்கள் தொடர்கிறோம். அந்த வாக்குமூலங்களை பொறுத்து இந்நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அமர்வு தங்களுடைய முந்தைய தீர்ப்புகளை கவனித்து, ஏற்று **கன்ஹையாலால் எதிர் இந்திய அரசு** என்ற வழக்கில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்கள்:

> "**45.** என்.டி.பி.எஸ். சட்டம் பிரிவு 67-னையும் **ராஜ்குமார் கார்வால்** என்ற வழக்கில், அது மேலுள்ள சட்டம் பிரிவு 53-ன் கீழ் காவல் நிலைய அதிகாரிக்குண்டான அதிகாரத்தினை கொண்ட அதிகாரி, இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 25-ன் கீழான வரையரைப்படி காவல் அதிகாரி இல்லை" மிரட்டுதல் மற்றும் குற்றமுறு மிரட்டுதலின் அடிப்படையில் கொடுக்கப்படாதவரை என்.டி.பி.எஸ். சட்டம் பிரிவு 67-ன் கீழான வாக்குமூலமானது குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 161-ன் கீழ் கொடுக்கப்படும் வழக்குமூலத்தை போன்றது அல்ல. இந்த முக்கிய வேறுபாடே, என்.டி.பி.எஸ். சட்டம் பிரிவு 67-ன் கீழ் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தை அதனை கொடுத்த நபருக்கு எதிராக ஒப்புதல் வாக்குமூலமாக பயன்படுத்த அனுமதிக்கிறது மற்றும் அந்த வாக்குமூலத்தை

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 24 to 27 வரையிலான பிரிவுகளின் செயல்பாட்டிலிருந்து விலக்குகிறது என்று இந்நீதிமன்றத்தால் வெளிபடுத்தப்பட்ட கோணத்தினை கவனத்தில் கொண்டு நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்."

8. பிறகு மற்றொரு இரு நீதிபதி கொண்ட அமர்வு, **டோடான் சிங் எதிர் தமிழ்நாடு அரசு** என்ற வழக்கில், இந்த வழக்கு மறுபரிசீலினை செய்யவேண்டியுள்ளதால் அதனை பெரிய அமர்வின் முன் வைக்க உத்தரவிட்டது. **டோடான் சிங்** (உச்ச நீதிமன்றம்) வழக்கில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

"**40.** எங்கள் பார்வையில் மேற்கண்ட வாதமானது **கன்ஹையாலால்** வழக்கின் விகிதாச்சாரனை மறுபரிசீலினை செய்ய வேண்டும் என்பதனை இன்றியமையாததாக்குகிறது. **கன்ஹையாலால்** மற்றும் நூர் அக வழக்கினை கவனித்த பிறகு, **நிர்மல் சிங் பெகல்வான்** வழக்கில் **கன்ஹையாலால்** கருத்தினை ஏற்கனவே இந்நீதிமன்றம் சந்தேகப்பட்டபோது அது இன்னும் தேவைப்படுகிறது. அந்த வகையில் இந்நீதிமன்றம் (**நிர்மல் சிங் பெகல்வான்** வழக்கு 302 பத்தி 15)

"15. கன்ஹையாலால் வழக்கில் இரு நீதிபதி அமர்வு 1872-ம் ஆண்டு சாட்சிய சட்டம் பிரிவு 25, சுங்க சட்டம் பிரிவு 108-ன் கீழான நெறிமுறை மற்றும் கோட்டுபாடுகளையும், போதை பொருள் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபரை விசாரணை செய்து, நீதிமன்ற

விசாரணைக்கு கொண்டுவரும் சுங்க அதிகாரியின் அதிகாரங்களும் ஆராயப்படவில்லை என்பதும் எங்களுக்கு தெரிகிறது. அந்த வழக்கு ராஜ்குமார் வழக்கினை பிரத்யோகமாக சார்ந்திருந்தது. சமீப காலத்தில் நூர் அக வழக்கு தீர்ப்பு இந்த பொருண்மையை விரிவாக விவரித்துள்ளது. கட்டாயமான பிரிவு 50 னை கடைபிடிக்காததால் நூர் அக வழக்கின் தீர்ப்பின் விகிதத்தினை பின்பற்றுவது எங்களுக்கு சரியாக இருக்கும் என நாங்கள் கருதுகிறோம்" என்று குறிப்பிட்டுள்ளது. ”

41. மேற்கூறிய காரணங்களுக்காக, என்.டி.பி.எஸ். சட்டத்தின் கீழ் விசாரணை செய்யும் அதிகாரி காவல்துறை அதிகாரியாக தகுதி பெற்றவரா, இல்லையா என்ற பிரச்சனையை மறு பரிசீலினை செய்வதற்கு இந்த பிரச்சனையை பேராயதிற்கு பரிந்துரைக்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.

42. இந்த சூழலில், தொடர்புடைய பிற பிரச்சனை அதாவது சட்டப்பிரிவு 67-ன் கீழ் விசாரணை அதிகாரியால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தை, அந்த அதிகாரியினை காவல்துறை அதிகாரி என கருதாவிட்டாலும் கூட, ஒப்புதல் வாக்குமூலமாக கருத இயலுமா, இல்லையா என்பதனையும் பேராயதிற்கு அனுப்ப வேண்டும். ஏனென்றால் இது அந்த வாக்குமூலமானது, குற்றவியல் நடைமுறை சட்டத்தின் பிரிவு 161-ன் கீழான வாக்குமூலமாக எடுத்துக்கொள்ள வேண்டுமா அல்லது பிரிவு 164-ன் கீழான ஒப்புதல் வாக்குமூலத்தின்

தன்மையை பெறுமா என்ற முதல் பிரச்சனை பொருண்மையுடன் உட்கலந்தது"

9. ஆகவே என்.டி.பி.எஸ். சட்டம் பிரிவு 67-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம், அதனை பதிவு செய்த அதிகாரி காவல்துறை அதிகாரியாக கருதப்படவில்லை என்றாலும் ஒப்புதல் வாக்குமூலமாக கருத இயலுமா என்ற எழுவினாவானது நீதியர் பேராயத்திற்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

10. ஒருவேளை நாங்கள் என்.டி.பி.எஸ். சட்டம் பிரிவு 67-ன் கீழான அந்த வாக்குமூலம் ஒப்புதல் வாக்குமூலமாகலாம் என்ற வகையில் தொடர்ந்தாலும் எங்களை பொறுத்தவரை அதனை உடன் குற்றஞ்சாட்டப்பட்டவதற்கு எதிராக சார்ந்திருப்பதற்கு முன்னால் சில கூடுதல் அம்சங்கள் நிறுவப்பட்டிருக்க வேண்டும். உடன் குற்றச்சாட்டுபவரின் ஒப்புதல் வாக்குமூலம் மற்ற குற்றவாளிக்கு எதிராக சில சூழல்களில் ஏற்புடையதாக்கும் பயங்கரவாத மற்றும் சீர்குலைக்கும் நடவடிக்கைகள் சட்டம் பிரிவு 15 போல் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை உடன் குற்றறம் சாட்டப்பட்டவருக்கு எதிராக ஏற்புடைய தாக்கக்கூடிய எந்த ஒரு பிரிவும் என்.டி.பி.எஸ். சட்டத்தில் இல்லை. ஆகவே பொதுவாக ஒரு உடன் குற்றறம் சாட்டப்பட்டவரின் ஒப்புதல் வாக்குமூலம் மற்ற குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக எவ்வாறு பயன்படும் என்பது குறித்து இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட சட்டங்களின் அடிப்படையில் இவ்வழக்கானது பார்க்கப்படுகிறது.

11) **காஷ்மிரா சிங்** எதிர் **மத்திய பிரதேஷ்** என்ற வழக்கில் இந்நீதிமன்றம் **பூபோணி சாகு எதிர் அரசு** என்ற வழக்கில் பிரவி கௌன்சிலின் தீர்வினை சார்ந்து கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டது.

" குருபாசானின் ஒப்புதல் வாக்குமூலம் மேல்முறையீட்டாளரை சிக்க வைப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. எந்த அளவிற்கு எந்த வழியில் குற்றஞ்சாட்டப்பட்டவரின் ஒப்புதல் வாக்குமூலத்தை,உடன் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு எதிராக பயன்படுத்தப்படலாம் என்ற வினா எழுகிறது. சாதாரணமாக இது சாட்சியம் இல்லை என்பது வெளிப்படையானது ஏனென்றால் **பூபோணி சாகு எதிர் அரசு** என்ற வழக்கில் " இது சாட்சிய சட்டப்பிரிவு 3-ன் கீழான சாட்சியத்தின் வரையறைக்குள் வராது இது உறுதிமொழியின் அடிப்படையிலோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவரின் முன்னிலையிலோ கொடுக்கப்பட வேண்டியதில்லை. அது குறுக்கு விசாரணையின் மூலம் பரிசோதனைக்கப்படுவது இல்லை" என்றும் இது மிகவும் வலிமை இழந்த சாட்சியம். இது இதனைப் போன்ற எந்த குறைகளுக்கும் உட்படாத குற்றத்தினை ஒப்புக்கொண்ட நபரின் சாட்சியத்தை விட இந்த சாட்சியம் வலிமை இழந்த சாட்சிய வகையை சார்ந்து என்பதையும் மாண்புமிகு பிரிவு கவுன்சில் நீதியரசர்கள் குறிப்பிட்டார்கள்.

அவ்வாறான ஒப்புதல் வாக்குமூலத்தினை தண்டனைக்கு அஸ்திவாரமாக பயன்படுத்தக் கூடாது, மற்ற சாட்சியங்களுடன் ஆதரவாக

பயன்படுத்தலாம் என்றும் அவர்கள் கூறியிருந்தார்கள். இந்த குறிப்புகளின் அடிப்படையில் அதே காரணத்தினை கூறுவது பயனற்றது ஆனால் தற்போது வரை உள்ள தவறான புரிதலை விளக்க வேண்டியது தேவையாக உள்ளது என்று நாங்கள் கருதுகிறோம். எந்த வழியில் இது மற்ற சாட்சியங்களுக்கு ஆதரவாக இருக்கும்? குறைகளை நிரப்பு இதனை பயன்படுத்தலாமா? உடன் குற்றவாளியை உறுதிப்படுத்த இதனை பயன்படுத்தலாமா? அல்லது இந்த வழக்கினை போல் உடன் குற்றவாளி அல்லாத சாட்சியின் நம்பகத்தன்மையை பொறுத்து உடன் குற்றவாளியாக வைக்கப்பட்டுள்ளார். ஏனென்றால் உடன் குற்றவாளியின் சாட்சியம் உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே அதனை ஏற்க இயலும் என்று நீதிபதி அவரை நம்ப மறுத்துவிட்டார் என்பதையே கேள்வியாகும்.

எங்களை பொறுத்தவரை இந்த விஷயத்தை **அரசு எதிர் லலித் மோகன் சக்கரபர்த்தி** என்ற வழக்கில் சர் லாரன்ஸ் ஜென்கின்ஸ் சுருக்கமாக கூறியுள்ளார். அதில் அவர், **பெரியசாமி மூப்பனுக்கு** எதிராக என்ற வழக்கில், நீதிபதி ரெய்லி சொன்னதை போல், ஒப்புதல் வாக்குமூலத்தை உடன் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு எதிரான மற்ற சாட்சியங்களை உறுதிப்படுத்தவோ அல்லது மற்ற வழிகளில் மட்டுமே பயன்படுத்த இயலும் என்று கூறியுள்ளார்.

" இதற்கு மேல் சட்டப்பிரிவு செல்லவில்லை - உடன் குற்றறஞ்சாற்றப்பட்ட நபருக்கு எதிராக போதிய சாட்சியம் இருந்து அவை

நம்பப்பட்டால் அவருடைய தண்டனையை உறுதிப்படுத்த பிரிவு 30-கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகையிலான ஒப்புதல் வாக்குமூலத்தினை மேற்படி சாட்சியத்தினை நம்புவதற்கு கூடுதல் காரணமாக ஏற்கலாம் ".

மேற்படி கவனிப்புகளை நிலையான வார்த்தைகளில் மொழிபெயர்த்தால் அவை இவ்வாறு வரும். இந்த வகையான வழக்கினை கையாள்வதில் சரியான முறை என்பது முதலில் ஒப்புதல் வாக்குமூலத்தை தவிர்த்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான அனைத்து சாட்சியங்களையும் ஒன்று திரட்ட வேண்டும், அதை மட்டுமே நம்பி குற்ற தண்டனை அளிக்கக்கூடிய அளவிற்கு நம்பத்தகுந்ததா என்று பார்க்க வேண்டும். அது ஒப்புதல் வாக்குமூலம் இல்லாமல் தன்னிச்சையாக நம்பத்தகுந்தது என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தை உதவிக்கு அழைக்க தேவையில்லை. ஆனால் இது தண்டனையை நிலை நிறுத்த போதுமானது என்று நீதிபதி நம்பும் பட்சத்தில் கூட மற்ற சாட்சியங்களின் அடிப்படையில் செயல்படாத வழக்குகளும் எழும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் நீதிபதி ஒப்புதல் வாக்குமூலத்தின் உதவியைப் பெற்று அதைப் பயன்படுத்தி மற்ற சான்றுகளுக்கு உத்தரவாதம் அளிக்கலாம், இதன் மூலம் ஒப்புதல் வாக்குமூலத்தின் துணையின்றி அவர் ஒப்புக்கொள்ள தயாராக இல்லை என்று எண்ணுவததை உறுதிப்படுத்தமுடியும்."

12) **காஷ்மிரா சிங்** (உச்ச நீதிமன்றம்) என்ற வழக்கில் உச்சநீதிமன்றம் கூறிய சட்டத்தினை **ஹரி சரண் குர்மி மற்றும் ஜோகியா ஹஜம் எதிர் பீகார் மாநிலம்** என்ற

வழக்கில் இந்நீதிமன்றத்தின் அரசியல் அமைப்பு அமர்வு இந்த சட்டத்தை அங்கீகரித்தது. அதில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது

"நாங்கள் ஏற்கனவே குறிப்பிடப்பட்டவாறு இந்த வினாவானது பல்வேறு சூழல்களில் நீதிமன்ற உத்தரவுகளால் கருத்தில் கொள்ளப்பட்டு, ஒப்புதல் வாக்குமூலத்தினை உடன் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு எதிரான அடிப்படை சாட்சியாக கருத இயலாது என்று உறுதியாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. குற்ற வழக்குகளில் அரசு தரப்பு ஒரு குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் ஒப்புதல் வாக்குமூலத்தினை மற்றொரு குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரானதாக எடுத்துரைக்கும் போது, முதலில் அந்த நபருக்கு எதிரான மற்ற சாட்சிகளை கருத்தில் கொள்வதே முறையானது. ஒருவேளை அந்த சாட்சியங்கள் போதுமானதாக இருப்பதாக தெரிந்து, நீதிமன்றம் அந்த குற்றச்சாட்டப்பட்ட நபருக்கு எதிராக வணையப்பட்ட குற்றச்சாட்டினை அந்த சாட்சியம் நிரூபிக்கிறதாக கருத நினைத்தால், மற்ற சாட்சியங்களின் மூலம் தான் எடுத்த முடிவினை உறுதிப்பட்ட நீதிமன்றம் ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்பதே சரியானது. **அரசு எதிர் லலித் மோகன் சக்கரபர்த்தி** என்ற வழக்கில் சார் லாரன்ஸ் ஜென்கின்ஸ் கூறியது போல் ஒப்புதல் வாக்குமூலத்தை உடன் குற்றறம் தாட்டப்பட்டவருக்கு எதிரான மற்ற சாட்சியங்களை உறுதிப்படுத்த மட்டுமே பயன்படுத்த இயலும். **பெரியசாமி மூப்பன் என்ற வழக்கில் நீதிபதி ரெய்லி** பிரிவு 30 பின்வருனவற்றைத் தாண்டி செல்லாது என்று குறிப்பிட்டிருந்தார்: "உடன் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு எதிரான

சாட்சியங்கள் அவரின் தண்டிக்க போதுமானதாக உள்ளது என்று நம்பப்பட்டால், அதன் பிறகு பிரிவு 30-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்புதல் வாக்கு மூலத்தினை மேற்படி சாட்சியத்தினை நம்புவதற்கு கூடுதல் காரணமாக ஏற்கலாம்". **பூபோனி சாகு எதிர் அரசு** என்ற வழக்கில் பிரைவி கவுன்சில் இதே பார்வையை முன் வைத்தது. "ஒரு உடன் குற்றம் சாட்டப்பட்ட நபரின் ஒப்புதல் வாக்குமூலமானது மிகவும் வலிமையற்ற வகையை சார்ந்த சாட்சியம் அது இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 3-ன் கீழான சாட்சியம் என்ற வரையறைக்குள் வராது. இது உறுதிமொழியின் அடிப்படையிலோ குற்றச்சாட்டப்பட்டவரின் முன்னிலையிலோ கொடுக்க வேண்டியதில்லை. குறுக்கு விசாரணையின் மூலம் பரிசோதிக்கப்படுவதில்லை. இது இதனை போன்ற எந்த குறைபாடுகளுக்கும் உட்படாத குற்ற ஒப்புக்கொள்பவரின் சாட்சியத்தினை விட வலிமையற்ற ஒரு வகையான சாட்சியம் என்று வாரியத்திற்கான முன்னிலையான சர் ஜான் பியூமாண்ட் கருத்துரைத்தார். எவ்வாறாயினும் பிரிவு 30 ஒப்புதல் வாக்குமூலத்தினை கவனத்தில் கொள்ளலாம் என்பதற்கு வழிவகை செய்கிற நிலையில், இதனை சாட்சியமாக ஏற்று அதில் நீதிமன்றம் செயல்படலாம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் இந்த பிரிவு ஒப்புதல் வாக்குமூலத்தை நிரூபனம் என்று கூறவில்லை. வேறு சாட்சியங்கள் இருக்க வேண்டும். வழக்கினை நிரூபிக்கும் பல பொருண்மைகளை கவனத்தில் கொள்ளும் போது ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றாக அதில் அடங்கும்; இதனை மற்ற சாட்சியங்களின் அளவு மற்றும்

எடையுடன் வைக்க வேண்டும்." பிரிவு 30-ன் கீழான சரத்தின் விளைவாக ஒப்புதல் வாக்குமூலத்தை பொதுவாக சாட்சியமாக கருதலாம் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஏனென்றால் நீதிமன்றத்தால் கருத்தில் கொள்ளப்படும் ஒவ்வொன்றும் சாட்சியம். பொதுவாக இந்நீதிமன்றத்தால் கருத்தில் கொள்ளப்படும் சூழல்கள் மற்றும் அதற்கான நிகழ்வுகளும் சாட்சியங்கள். பிரிவு 30-ன் படி ஒப்புதல் வாக்குமூலத்தை பொதுவாக சாட்சியம் என்று கருதினாலும், பிரிவு 3-ன் படி வரையறுக்கப்பட்டுள்ள சாட்சியத்தில் அது வராது என்பது அவ்வாறே உள்ளது. முடிவாக குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு எதிராக வழக்கினை நடத்தும்போது உடன் குற்றறம் சாட்டப்பட்ட நபரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் இருந்து நீதிமன்றம் வழக்கினை ஆரம்பிக்க இயலாது. முதலில் அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள மற்ற சாட்சியங்களில் தொடங்கி அந்த சாட்சியங்களின் தரம் மற்றும் விளைவினை பொறுத்து கருத்தினை உறுதி செய்த பிறகு குற்றத்தினை உறுதிப்படுத்துவதற்காக ஒப்புதல் வாக்குமூலத்தை பயன்படுத்தலாம். இதுவே பிரிவின் 30-ன் கண்டுள்ள சரத்தின் விளைவின் சுருக்கமாகும். **பூபோனி சாகு** என்ற வழக்கில் பிரைவி கவுன்சிலால் கொடுக்கப்பட்ட முடிவினை அங்கீகரித்து **காஸ் மீராசிங் எதிர் மத்திய பிரதேசம் மாநிலம்** என்ற வழக்கில் இதே கோணத்தினை இந்நீதிமன்றம் வெளிப்படுத்தியுள்ளது."

13. சட்டத்தில் ஒரு உடன் குற்றறம் சாட்டப்பட்ட நபரின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றொரு குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு எதிராக ஏற்றுக்கொள்ள கூடும் என்று சட்டத்தில் சிறப்பு பிரிவுகள் உள்ள வழக்குகள் தவிர்த்து மற்ற வழக்குகளில் உரிய சட்டத்தினையே இந்நீதிமன்றம் எப்போதும் கடைப்பிடிக்கிறது.

14. அசல் வழக்கில் கேள்விக்குரிய குற்றத்தில் மேல் முறையீட்டாளர் ஈடுபட்டுள்ளார் என்பதை கூறுவதற்கு உடன் குற்றம் சாட்டப்பட்ட நபரின் வாக்குமூலத்தை தவிர வேறு ஆவணங்கள் இல்லை என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஆகவே எங்களுக்கு மேலே சொல்லப்பட்டுள்ள உடன் குற்றம் சாட்டப்பட்ட நபரின் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று மட்டுமே உள்ளது. இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள சட்டங்களின் அடிப்படையில் ஒரு உடன் குற்றம் சாட்டப்பட்ட நபரின் ஒப்புதல் வாக்குமூலத்தினை மற்றொரு உடன் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு எதிராக அடிப்படை சாட்சியமாக ஏற்க இயலாது. அதனை இந் நீதிமன்றத்திற்கு உத்தரவாதம் அளிக்க பயன்படுத்தலாம். மற்ற அடிப்படை சாட்சியங்கள் இல்லாத நிலையில் உடன் குற்றம் சாட்டப்பட்ட நபரின் வாக்குமூலத்தினை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு மேல்முறையீட்டாளரை தண்டிப்பது முறையற்றதாகும். ஆகவே தனக்கு எதிரான குற்றம் சாட்டுகளில் இருந்து விடுதலை பெற மேல்முறையீட்டாளருக்கு உரிமை உள்ளது. ஆகவே இம்மேல்முறையீட்டை நாங்கள் ஏற்றுக்கொண்டு தண்டனை மற்றும் சிறை தண்டனை உத்தரவினை ரத்து செய்து மேல்முறையீட்டாளரை

விடுவிக்கிறோம். வேறு வழக்குகளில் மேல்முறையீட்டாளரின் காவல் தேவைப்படாத பட்சத்தில் மேல்முறையீட்டாளர் விடுவிக்கப்படுகிறார்.

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."